**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 5**

**இறுதிப்பரீட்சை – 2020/2021 ( திறந்த புத்தகம்)**

**பகிரங்க சர்வதேச சட்டம் - LLU5712/LWU3315**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

திகதி: 11 செப்டெம்பர் 2021 நேரம்: பி.ப 9.30 - பி.ப 12.30

---

**இவ்வினாத்தாள் ஐந்து (05) வினாக்களைக் கொண்டுள்ளது.**

**நீா் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.**

**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. 'கடந்த சில தசாப்தங்களின் மிக முக்கிய மாற்றங்களுள் ஒன்றாவது காலனித்துவ நீக்கத்திற்கான அலையின் காரணமாக தேசிய நாடுகளை உள்ளடக்கிய சர்வதேச சமூகத்தின் மிகப்பெரும் விரிவாக்கம் ஆகும். மற்றுமொரு முக்கிய விருத்தி ஆவது நாடுகளின் ஒத்துழைப்பிற்கான நிரந்தர அமைப்புகளான சர்வதேச தாபனங்களின் அபரித வளர்ச்சியாகும். மூன்றாவது முக்கிய மாற்றமாவது வெறுமனே தேசிய யுத்த விவகாரங்களை தடுப்பதாக இன்றி, மனித நலனின் மேம்பாட்டை பாதிக்கும் வேறுபட்ட முக்கிய தலைப்புகளில் தற்போது தீவிரமாக அக்கறை செலுத்தும் சர்வதேச சட்டத்தின் விடயப் பொருள் ஆகும்'.

**Dr.P.R.Menon*, 'The Legal Personality of International Organisation',* (19992) 4 Sri Lanka J Int' l L 79**

இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

சர்வதேச சட்ட ஆளுமையின் சமகால சவால்களின் பின்னணியில் மேலுள்ள கூற்றின் வலிதாந்தன்மையை நுணுக்கமாக ஆராய்க.

உமது விடையை சட்ட எடுத்துக்காட்டுகள் மற்றும் நீதியியல் தீர்ப்புகள் என்பனவற்றுடன் விளக்குக.

**(25 புள்ளிகள்)**

2. லிக்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் என்பன இரு அண்டை நாடுகள் ஆகும். தஜிகிஸ்தானால் மேற்கொள்ளப்பட்ட கடல் முற்றுகை ஒன்றிற்கு பதிலளிக்கும் வகையில் லிக்கிஸ்தான் யுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்தியது. தஜிகிஸ்தானின் வடமாகாணத்தில் உள்ள சில பிரதேசங்களை லிக்கிஸ்தானின் இராணுவப்படைகள் ஆக்கிரமித்ததுடன், குடிமக்களை படுகொலை செய்தல் மற்றும் கட்டாய வேலை பயன்பாட்டிற்காக அதிக எண்ணிக்கையிலான மக்களை நாடு கடத்தல் முதலான மக்களிற்கெதிரான பல கொடுமைகளை மேற்கொண்டு குற்றம் இழைத்தது. மேலும் குடிமக்களை அவர்களது வீட்டின் வெளியே தாக்கி , அவர்கள் வீடுகளையும் பிற சொத்துக்களையும் அழித்தன.

சில மாதங்களிற்கு பின்னர் லிக்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் இரண்டிற்கும் இடையே உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அவ் உடன்படிக்கை 'சில சொத்துக்கள் தொடர்பான பொருளாதார வினாக்களிற்கான தீர்வு' குறித்து நோக்கியது. பின்வருவன அவ்வுடன்படிக்கையின் ஒரு பாகம் ஆகும்.

உறுப்புரை 1 – ' நிலுவையில் உள்ள ஒரு பொருளாதார இயல்புள்ள வினாக்கள் தொடர்பாக தஜிகிஸ்தானிற்கு லிக்கிஸ்தான் நட்டயீடு செலுத்த வேண்டும்'.

உறுப்புரை 2- 'மேற்குறிப்பிடப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஏதேனும் சாத்தியமுள்ள நீதியியல் நடபடிகள் அல்லது பிற சட்ட நடவடிக்கைகளிற்காக தஜிகிஸ்தானின் இயற்கை அல்லது சட்ட நபர்களிற்கு லிக்கிஸ்தான் அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும்.

இதேவேளை தஜிகிஸ்தானில் கைது செய்யப்பட்டு பின்னர் லிக்கிஸ்தானிற்கு நாடு கடத்தப்பட்ட தஜிகிஸ்தான் பிரஜையான திரு.பெரி என்பவர், அங்கு அவர் தடுத்து வைக்கப்பட்டு , யுத்தம் முடிவுறும் வரை வெடிமருந்து தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியுமாறு வற்புறுத்தப்பட்டார். அவர் இச்செயல்களிற்கு எதிராக லிக்கிஸ்தானின் மீது, தஜிகிஸ்தான் நீதிமன்றில் வழக்கு நடவடிக்கையை தாக்கல் செய்தார். சர்வதேச குற்றம் ஒன்றை ஆக்கும் செயல் ஒன்றின் மீதான குற்றம் சாட்டுதல் தொடர்பான சந்தர்ப்பங்களில் அரச விடுபாட்டுரிமை பிரயோகிக்கப்படாது என்பதன் அடிப்படையில் திரு.பெரி இனால் லிக்கிஸ்தானிற்கு எதிராக கொணரப்பட்ட நட்டயீட்டுக் கோரிக்கையின் மீது தஜிகிஸ்தான் நீதிமன்றங்களிற்கு நியாயாதிக்கம் இருப்பதாக நீதிமன்றம் உறுதி செய்தது. மேலும் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவினர்களால், உயிர் மற்றும் சொத்துக்களின் இழப்புகளிற்கான நட்டயீடு கோரி, லிக்கிஸ்தானிற்கு எதிரான வழக்குகள் தஜிகிஸ்தான் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டன.

மேலுள்ள சந்தர்ப்பத்தில் இருந்து எழும் சட்ட விடயங்களை பகிரங்க சர்வதேச சட்டத்தின் கீழ் ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

3. இந்தியானோ மற்றும் லங்காஜனோ ஆகியன அண்டை நாடுகள் என்பதுடன் , அவற்றிற்கிடையில் ரியோ பே எனும் நீரிணை ஒன்று காணப்படுகிறது. இந்தியானோ ஆனது , சுப்பிரியானோ எனும் நாடு ஒன்றிற்கு டீசல் ஏற்றுமதி செய்ய தீர்மானித்ததுடன் , 270,00 டன் டீசல் எண்ணெயை சுப்பிரியானோவிற்கு விற்பனை செய்யய ஒப்பந்தம் ஒன்றில் கைசாத்திட்டது. கோரப்பட்ட டீசல் எண்ணெய் ஆனது சுப்பிரியானோவிற்கு 'நிவ் சண்டா' எனும் இந்தியானோவின் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்றின் மூலம் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. இந்தியாயோனாவில் இருந்து சுப்பிரியானோ நோக்கி செல்கையில் ரியோ பே இனைக் கடக்கும் போது , லங்கானோவின் கடற்பரப்பில் 'நிவ் சண்டா' ஒரு புறம் தீ பற்றி வெடித்தது. விபத்தைத் தொடர்ந்து உடனடியாக தீயை அணைப்பதற்கு கப்பல்கள் மற்றும் விமானங்கள் மூலம் லங்கானோ உதவியது. லங்கானோவின் தீயணைப்பு குழு தீப்பரவலை கட்டுப்படுத்துவதிலும், ஆரம்ப கட்டத்தில் கப்பலை மீட்பதிலும் வெற்றிக் கண்டதுடன் , இந்தியானோ எஞ்சியிருந்த டீசல் எண்ணெயை ரியோ பே இல் இருந்து அகற்றுவதற்கு இணங்கியது. எவ்வாறாயினும் ஆரம்பக்கட்ட தீ காரணமாக 1700 டன் இரசாயனங்கள் லங்கானோவின் கடற் சூழலில் கசிவுற்றிருந்தது. மேலும் லங்கானோவின் மீட்பு பணி முயற்சிகள் அதனை மிகப்பெரும் பொருளாதார இழப்பிற்கு உள்ளடக்கியிருந்தது.

தீ தொடர்பான விசாரணை ஒன்றை அடிப்படையாகக் கொண்ட ஆரம்ப அறிக்கையொன்றின் பிரகாரம் , தீ வெடிப்பிற்கான காரணி 'நிவ் சண்டாவின்' நிலை தொடர்பான போதுமற்ற சோதனை எனக் கண்டறியப்பட்டது. லங்கானோ , இந்தியானோவின் அரசாங்கம் நிவ்சண்டாவால் ஏற்பட்ட பேரழிவின் விளைவுகளிற்கு பொறுப்புக் கூற வேண்டும் என்றுரைத்தது. எவ்வாறாயினும் 'நிவ் சண்டா' ஆனது, 'அக்குவா சிப்பிங் குருப் ஒப் கம்பனிஸ்' எனும் தனியார் கம்பனிக்கு உரித்தானது என்றும் , தீப்பரவலிற்கும் அதனாலான விளைவுகளிற்கும் தான் பொறுப்பில்லை என்றும் கூறி அறிக்கை ஒன்றை இந்தியானோ வெளியிட்டது. அதிகாரபூர்வ பதிவுகளின் பிரகாரம் , 'அக்குவா சிப்பிங் குருப் ஒப் கம்பனிஸ்' இல் இந்தியானோவிற்கு 65 வீத பங்கு காணப்பட்டதுடன், அதன் வியாபார நடவடிக்கைகள் இந்தியானோவால் ஆளப்பட்டன.

லங்கானோவிற்கு ஏற்பட்ட சேதத்திற்கு இந்தியானோ பொறுப்புடையதாகுமா என்பதில் சிறப்பு கவனம் செலுத்தி , இச்சந்தர்ப்பத்துடன் தொடர்புடைய சட்ட விடயங்களை ஆராய்க. உமது விடையை பொருத்தமான எடுத்துகாட்டுகளால் ஆதாரப்படுத்துக.

**(25 புள்ளிகள்)**

4. சுப்பிரியானோ எனும் நாடு ஆனது சர்வதேச சட்டத்தை ஏற்றுக் கொள்ளும் அதன் அரசியலமைப்பிற்கு அமைய சர்வதேச பொருத்தனைகளின் கீழான கடப்பாடுகளை நிலைநிறுத்தும் ஒரு சனநாயக சோசலிஷச குடியரசு ஆகும். சுப்பிரியானோவின் பாராளுமன்றம் சகல பல்கலைக்கழக பெண் ஊழியர்களதும் ஊதியத்தை 1.85 சதவீதத்தால் குறைப்பதற்கு சட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது. சுப்பிரியானோவின் அரச மருத்துவ பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் வைத்தியரும் , விரிவுரையாளருமான ரேமோனா என்பவள் சுப்பிரியானோவின் அரசியலமைப்பு மற்றும் அதன் சர்வதேச கடப்பாடுகள் என்பவற்றை மீறுவதால், முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாது எனக் கூறுகிறாள். அவளது தேடலின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்ட சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் ஆனது பின்வரும் சர்வதேச பொருத்தனைகளது உறுப்புரைகளை மீறுவதாக அவள் நம்புகிறாள்.

- *குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 6* :

சகல நபர்களும் சட்டத்தின் முன் சமம் என்பதுடன், சட்டத்தின் அப்பாதுகாப்பிற்கு எவ்வித பாராபட்சங்களும் இன்றி உரித்துடையவர்களும் ஆவர். இவ்வகையில் சாதி, நிறம், பால், மொழி ,சமயம் , அரசியல் அல்லது பிற கருத்துக்கள் ,தேசியம் அல்லது சமூக மூலம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்து முதலான ஏதேனும் அடிப்படையிலான பாராபட்சத்திற்கு எதிரான, சமமானதும் வினைத்திறனுமானதுமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் ஏதேனும் பாராபட்சத்தை சட்டம் தடை செய்தல் வேண்டும்

- *பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகளிற்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 7 அ (1)*

ஏதேனும் வகையிலான பாராபட்சம் இன்றி , சம பெறுமதியுள்ள வேலைக்கான நியாயமான சம்பளத்தையும் , சமமான ஊதியத்தையும் ஆண்களால் அனுபவிக்கப்படும் வேலை தராதரத்தில் இருந்து குறையாது , சமமான வேலைக்கு சமமான ஊதியம் பெண்களிற்கு உறுதிபடுத்தப்பட வேண்டும்.

- *பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையின் உறுப்புரை 3*

அனைத்து துறைகளிலும் குறிப்பாக அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார துறைகளில் ஆண்களிற்கு நிகரான அடிப்படைச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளை அனுபவிப்பதிலும், செயற்படுத்துவதிலும் உத்தரவாதத்தை ஏற்படுத்துவதற்கான நோக்கத்திற்காகவும், முழுமையான மேம்பாட்டை, முன்னேற்றத்தை பெண்கள் பெறுவதற்காகவும் சட்டமியற்றுவது உள்ளிட்ட எல்லா உகந்த நடவடிக்கைகளையும் இவ்வுடன்படிக்கைக்கான அங்கத்துவ நாடுகள் மேற்கொள்ள வேண்டும்.

உம்மை சுப்பிரியானோவின் அரச சட்ட கல்லூரியின் பகிரங்க சர்வதேச சட்டம் குறித்து பணியாற்றும் விரிவுரையாளராகக் கருதுக. சுப்பிரியானோவின் உள்நாட்டு நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட சர்வதேச பொருத்தனைகளின் உறுப்புரைகளது பிரயோகத்தன்மை குறித்து ரேமோனா அவளது வாதத்தை உறுதிபடுத்துவதற்கு உமது அறிவுரையை நாடுகிறாள்.

சுப்பிரியானோவின் அரசியலமைப்பும் அதன் சர்வதேச கடப்பாடுகளும் இலங்கையை ஒத்தது எனக் கருதுக. உமது அறிவுரையில் பொருத்தமான சர்வதேச சட்ட ஏற்பாடுகள், நீதியில் தீர்ப்புகள் மற்றும் சமகால உதாரணங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டுக.

**(25 புள்ளிகள்)**

5. மாகரிட்டா மற்றும் ஜெம்மா என்பன அண்டை நாடுகளாகும் என்பதுடன் ,இவற்றிற்கிடையே அவற்றின் எல்லையில் அமைங்துள்ள மத நினைச் சின்னம் ஒன்றான 'திமோரா கோவில்' என்பதன் உரிமையின் மீது 20 வருட காலமாக தீர்க்கப்படாத பிணக்கு ஒன்று காணப்படுகிறது. வரலாற்று பதிவுகளின் பிரகாரம் மாகரிடா, ஜெம்மா ஆகிய இரு நாடுகளுமே திமோரா மீதான உரிமையைக் கோருகின்றன. எவ்வாறாயினும் திமோரா கோவில் தற்போது ஜெம்மாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. மாகரிடாவும் ஜெம்மாவும் சமமான சக்தி வாய்ந்த நாடுகள் என்பதுடன் இரண்டுமே ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகள் ஆகும்.

ஜெம்மா, திமோரா கோவிலின் உரிமையை தன்னிடம் ஒப்படைக்காவிடின் தான் ஜெம்மாவின் மத மற்றும் கலாசார நினைவு சின்னங்கள் மீது குண்டுத்தாக்குதல் பிரயோகிக்க போவதாகக் குறிப்பிட்டு , அதிகாரபூர்வ அறிக்கை ஒன்றை மாகரிடா அண்மையில் வெளியிட்டது. அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிட்டு ஒரு வார காலத்தின் பின்னர், ஜெம்மாவின் புது வருடத் தினத்தன்று ஜெம்மாவின் சில மத மற்றும் கலாசார நினைவு சின்னங்களின் மீது குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றது. இதன் விளைவாக பல கட்டிடங்கள் அழிக்கப்பட்டதுடன் , 157 குடிமக்களும் மரணித்தனர். மாகரிடாவின் குண்டுத்தாக்குதல்கள் ஆனவை, அது ஒரு ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்ற வகையில் அதன் சர்வதேச கடப்பாடுகளை கடுமையாக மீறுதல் ஆகும் என்றும், இந்த சட்டவிரோத தாக்குதலிற்கு உலக நாடுகள் தீவிரமாக பதிலளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு பிரகடனம் ஒன்றை ஜெம்மா வெளியிட்டது. அடுத்த மாதம் கொண்டாடபடவுள்ள ஜெம்மாவின் சுதந்திர தினத்தன்று மாகரிடாவால் மற்றுமொரு தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என ஜெம்மா கணிக்கிறது.

மேலுள்ள சந்தர்ப்பத்தின் அடிப்படையில் ஜெம்மாவிற்கு அறிவுறுத்துக. உமது விடை பொருத்தமான எடுத்துக்காட்டுக்களால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

**(25 புள்ளிகள்)**

***பதிப்புரிமை பெற்றது***